# ஆரணி அருகே மின்கம்பி அறுந்து விழுந்து வாலிபர் படுகாயம்

ஆரணி ,செப்.26

ஆரணி அருகே மின்கம்பி அறுந்து விழுந்ததில் வாலிபர் படுகாயமடைந்தார். இதைக்கண்ட அப்பகுதி மக்கள் அலறியடித்து ஓடினர். திருவண்ணாமலைமாவட்டம்ஆரணிசுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில தினங்களாக இடியுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது.

இதனால் பல கிராமங்களில் பலத்த காற்றுடன் பெய்து வரும் மழைக்காரணமாக, பழுதடைந்த மின்கம்பங்கள், மின் ஒயர்கள் அறுந்து விழுவது,

மின்சாரம் துண்டிப்பு, மின்சாரம் தாக்கி படுகாயமடைவது போன்ற சம்பவங்களும் நடந்து வருகிறது.

இதேபோல் ஆரணி அடுத்த அக்கூர் கிராமம் பஜனை கோயில் தெருவைசேர்ந்தவர்பாஸ்கரன் மகன் தினேஷ் (23). இவர், சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார்.

இந்நிலையில், தினேஷ்குமார் நேற்று காலை வீட்டில் இருந்து பைக்கில் வெளியே வந்துள்ளார்.

அப்போது, அவரது வீட்டின் அருகே உள்ள மின்கம்பத்தில் இருந்து மின் ஒயர் திடீரென அறுந்து தினேஷ் மீது விழுந்துள்ளது.

இதில், மின்சாரம் தூக்கி வீசப்பட்ட தினேஷ் மயங்கி விழுந்துள்ளார். மேலும், அவ்வழியாக சாலையில் நடந்து சென்ற பொதுமக்கள் மின் கம்பி அறுந்து விழுந்தை பார்த்து அதிர்ச்சி அடைந்து அலறி அடித்து ஓட்டம் பிடித்தனர். தொடர்ந்து, கிராம மக்கள் உடனடியாக டிரான்ஸ்பார்மரில் மின் இணைப்பை துண்டித்துள்ளனர். மேலும், மின்சாரம் தாக்கி மயங்கி கிடந்த தினேஷ்யை அங்கிருந்தவர்கள் மீட்டு மாம்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்று அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த மின்வாரிய ஊழியர்கள் அறுந்து கிடந்த மின் ஒயரை சரி செய்து சீரமைத்தனர்.'

முறையான பராமரிப்பு இல்லை' இது குறித்து, பொதுமக்கள் கூறுகையில், அக்கூர் கிராமத்தில் தெருக்களில் உள்ள மின் கம்பம் மற்றும் விவசாய நிலங்களில் உள்ள மின் கம்பம், மின் ஒயர்கள் பழுதடைந்தும், மின் கம்பிகள் தாழ்வாக தொங்கி ஆபத்தான நிலையில் இருந்து வருகிறது. இதனைசீரமைக்கமின்வாரிய ஊழியர்களிடம் பழுதடைந்துள்ள மின்வயர்கள், கம்பங்களை அகற்றி சீரமைக்க கோரி பலமுறை மின்வாரிய ஊழியர்களிடம் புகார் தெரிவித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதேபோல், பராமரிப்பு பணிகளும் முறையாக மேற்கொள்வதில்லை. எனவே, இனிவரும் நாட்களில் இதுபோன்று பேராபத்து நடைபெறாமல் தடுக்க அக்கூர் கிராமத்தில் பழுதடைந்துள்ள ஒயர்கள் மற்றும் மின் கம்பங்களை மின் வாரிய ஊழியர்கள் அகற்றி சீரமைக்கும் முறையாக பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### 3 நாள் காவலில் எடுக்கப்பட்ட

# சாந்தி, அவரது கணவரிடம் விடிய விடிய விசாரணை

## வீரமணியின் சகோதரருக்கும் போலீஸ் வலைவீச்சு

சென்னை, செப். 26–

சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஜெம் கிரானைட்ஸ் அதிபர் வீரமணியின் கூட்டாளிகளான சாந்தி மற்றும் அவரது கணவர் மகேந்திர சிம்மனிடம், சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் விடிய விடிய தீவிர விசாரணை நடத்தினர். இந்த வழக்கில், வீரமணியின் சகோதரர் ஆசை தம்பியை போலீஸ் தீவிரமாக தேடி வருகின்றனர்.

சென்னையில் சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்ததாக, ஜெம் கிரானைட்ஸ் தொழில் அதிபர் வீரமணி (வயது 84) கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவரது தோழி சாந்தி (வயது 61) அவரது கணவர் மகேந்திர சிம்கனும் (வயது 63) சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அதோடு, ஜெம் கிரானைட்ஸ் நிறுவனத்தில் 23 ஆண்டுகள் பணி புரிந்த கணேசன் (55)என்பவரைச் சென்னை பாலியல் தடுப்பு பிரிவு போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கில் முதல் கட்ட விசாரணையின் போது, 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறுமிகளை குறி வைத்து வீரமணி செயல்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. இந்தநிலையில், சிறையில் அடைக்கப்பட்டுள்ள சாந்தி மற்றும் மகேந்திர சிம்மனை 3 நாள்கள் போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்கப் போக்சோ நீதிமன்றம் அனுமதி அளித்தது. இதன்படி, நேற்று மாலை முதல் இன்று அதிகாலை வரை இருவரிடமும் ரகசிய இடத்தில்வைத்துப்போலீசார் விடிய விடிய கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர். இந்த விசாரணையின் போது, வீரமணியிடம் அழைத்து வரப்பட்ட சிறுமிகள் எத்தனை பேர்? பாதிக்கப்பட்ட சிறுமிகளை மிரட்டப் பயன்படுத்தப்பட்ட வழிமுறைகள்என்ன? இந்தபாலியல் வலைப்பின்னலில் வேறு எந்தெந்த முக்கியப் பிரமுகர்களுக்குத் தொடர்பு உள்ளது? சிறுமிகளைச் சட்டவிரோதமாகப் பிடித்து வர யாருக்கெல்லாம் பணம் கொடுக்கப்பட்டது?

உள்ளிட்ட நூற்றுக்கணக்கான கேள்விகளை முன்வைத்து போலீசார் விசாரணை நடத்தினர். இந்தவிசாரணையை முழுமையாக வீடியோ பதிவு செய்துள்ளனர். இந்த வழக்கில் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவர் பெ.ஜான்பாண்டியனுக்கு தொடர்பு உள்ளதா என்ற கோணத்தில் போலீசார் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். அதேபோல், "நான் 2024லேயே புகார் அளித்தேன்" என்று கூறும் தமிழக காங்கிரஸ் எஸ்.சி. பிரிவு தலைவர் ரஞ்சன் குமார், எதனால் இவ்வளவு காலம் அமைதியாக இருந்தார், அவருக்கும் இந்த வழக்கிற்கும் ஏதேனும் உள்நோக்கம் கொண்ட தொடர்பு உள்ளதா என்றும் போலீசார் ரகசியமாக விசாரித்து வருகின்றனர்.

இந்த வழக்கிலிருந்து வீரமணியைக் காப்பாற்ற, ஈசிஆர் மற்றும் ஊட்டியில் உள்ள ரூ.130 கோடி மதிப்பிலான சொத்துக்கள் விற்கப்பட்டதாகத் தெரிகிறது. அதில் ரூ.70 கோடி பணம், முக்கிய போலீஸ் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த முறைகேடு காரணமாகவே, சென்னை முன்னாள் காவல் ஆணையர் அருண், கூடுதல் ஆணையர் என்.கண்ணன் மற்றும் உதவி ஆணையர் யாஸ்மின் ஆகியோர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மேலும், உதவி ஆணையர் யாஸ்மின், ஆய்வாளர்கள் மகேஷ் குமார், ராஜலட்சுமி ஆகிய மூன்று போலீஸ் அதிகாரிகளுக்கு சம்மன் அனுப்பட்டு, விசாரணை ஏற்கனவே தொடங்கிவிட்டது.

வீரமணியின் உதவியாளர் கணேசனுக்கு உதவியாகவும், இந்த நில விற்பனை மற்றும் பணப் பரிமாற்றங்களில் முக்கிய மூளையாகவும் செயல்பட்ட வீரமணியின் சகோதரர் ஆசைதம்பி தற்போது தலைமறைவாகியுள்ளார். அவரைப் பிடிக்கத் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பம் வளர்ந்த காலத்தில், வீடியோவில் இருப்பவர்களைக்கண்டுபிடிக்கமுடியவில்லை எனக் கூறி வழக்கை முடிக்க முடியாது" என்று நீதிபதி எஸ். பத்மா கடுமையாகச் சாடிய பிறகே, முடங்கிக் கிடந்த இந்த வழக்கு விஸ்வரூபம் எடுத்துள்ளது.

தற்போது, வீரமணியின் தோழி சாந்தி, அவரது கணவர் மகேந்திர சிம்கன் அளிக்கும் வாக்குமூலம், சில கைதுகள் இருக்கலாம் என போலீசார் தெரிவித்துள்ளனர். வீரமணி வழக்கு தமிழக அரசியலில் பெரும் புயலைக் கிளப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பாடத்திட்டம் உருவாக்குவதில் தொழில் துறையினர் பங்கேற்க வேண்டும்

## அமைச்சர் பி.விஸ்வநாதன் வலியுறுத்தல்

சென்னை, செப்.26

இந்திய தொழில்கூட்டமைப்பு (சி.ஐ.ஐ.) சார்பில் கல்வி தொழில்நுட்பம் தொடர்பான 3 நாள் கண்காட்சி சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்று தொடங்கியது. இக்கண் காட்சியை உயர் கல்வி அமைச்சர் பி.விஸ்வநாதன் தொடங்கி வைத்து பேசியதாவது:

கல்வியையும் தொழில்நுட்பத்தையும் தனித்தனியே பார்க்க முடியாது. ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவு, நேரடி அனுபவ கற்றல், தரவுகளைஅடிப்படையாகக் கொண்ட கல்வி ஆகியவை மாணவர்களை வேலைவாய்ப்புக்கு தயார்படுத்தும் முறைகளை மாற்றத் தொடங்கிவிட்டன. அந்த வகையில், தொழில்துறைக்கும் உயர் கல்வித் துறைக்கும் இடையிலான உறவு இதுவரை இல்லாத அளவுக்கு வளர்ந்துள்ளது.

தமிழகத்தில் உயர்கல்வி செல்வோரின் விகிதம் 52.3 சதவீதமாக இருக்கிறது. பெண்களின்சேர்க்கை விகிதம் 53.1சதவீதமாக உள்ளது. தமிழகத்தில் 13 அரசு பல்கலைக்கழகங்கள் மற்றும் 9 தனியார் பல்கலைக்கழகங்கள் உள்ளன. அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் 441 பொறியியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகளில் ஏறத்தாழ 8 லட்சம் மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

கல்வி நிறுவனங்களும் தொழில் துறையினரும் தொடர்ந்து இணைந்து செயல்பட வேண்டும். பாடத்திட்டத்தை உருவாக்குவதில் தொழில்துறையினர் பங்கேற்க வேண்டும்.

தொழில்துறை நிபுணர்கள் கல்லூரிகளுக்கு கவுரவ ஆசிரியர்களாக வருகைதந்துபாடம்நடத்த வேண்டும். தொழில் துறை புராஜெக்ட்களில் பங்கேற்க மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும். இன்டன்ஷிப், அப்ரன்டீஸ் வாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும். உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்தும் வகையில் சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறுகையில், "பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் நியமனம் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. எனவே அதுகுறித்து தற்போது விரிவாக விவாதிக்க முடியாது.

துணைவேந்தர் இல்லாத பல்கலைக்கழகங்களில், ஒருங்கிணைப்புக் குழு மூலம் இடைக்கால நிர்வாக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் சிண்டிகேட் உறுப்பினர்கள் கூடி, மூத்த பேராசிரியர்கள் அடங்கிய குழுவை உருவாக்கி, அதிலிருந்து ஒரு மூத்த பேராசிரியரை தேர்வு செய்து, துணைவேந்தருக்குரிய அதிகாரங்களுடன் செயல்படும் வகையில் நியமனம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் இந்த நடைமுறை மூலம் பொறுப்புதுணைவேந்தர்கள்நியமிக்கப்பட்டுள்ளனர். 11 பல்கலைக்கழகங்களில் பொறுப்பு துணைவேந்தர்கள் விரைவில் நியமனம் செய்யப்பட உள்ளனர்" என்றார்.

# திண்டுக்கல் அருகே நோய்வாய்ப்பட்ட பன்றிகளை சாலை ஓரத்தில் வீசி சென்ற மர்ம நபர்கள்

திண்டுக்கல் செப்.26

திண்டுக்கலில் இருந்து கரூர் செல்லும் நான்கு வழிசாலையில்தம்மனம்பட்டிஅருகேதரைப் பாலம் உள்ளது.

இந்தப் பாலத்தின் அடியில் 30க்கும் மேற்பட்ட நோய்வாய்ப்பட்ட வளர்ப்பு பன்றிகளை மர்ம நபர்கள் நான்கு வழிச்சாலையின் ஓரத்தில் வீசி சென்றுள்ளனர்

அதுதற்பொழுதுஇறந்துவிட்டதாகவும் அதன் உடல் பாகங்கள் அழுகும் பொழுது பன்றிக்காய்ச்சல் உள்ளிட்ட நோய்கள் பொதுமக்கள் மற்றும் விலங்கினங்களுக்கும் பரவும் அபாயம் உள்ளதாக பகுதி பொதுமக்கள் கூறுகின்றனர். அதை உடனடியாக கருத்தில் கொண்டு மாவட்ட நிர்வாகம் வேடசந்தூர் மற்றும் நாகம்பட்டி ஊராட்சி மன்ற நிர்வாகமும் இறந்து கிடக்கும் பன்றிகளை அப்புறப்படுத்தி நோய் பரவுவதற்கு முன்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

### திருமண மோசடிகளை தடுக்கும் வகையில்

# மேட்ரிமோனி இணையதளத்தை ஆதார் மூலம் சரி பார்க்க தமிழக அரசு அனுமதி

சென்னை, செப்.26

திருமணம் தொடர்பான மோசடிகளைத் தடுக்கும் வகையில், வாடிக்கையாளர்களின் அடையாளத்தை ஆதார் அடிப்படையில் சரிபார்க்க 'மேட்ரிமோனி' நிறுவனத்துக்கு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதுகுறித்து சமூகநலத் துறைச் செயலர் எம். பல்லவி பல்தேவ் வெளியிட்டுள்ள அரசிதழ் அறிக்கையில்கூறப்பட்டுள்ளதாவது: மேட்ரிமோனி நிறுவனத்தின் இணையதளத்தைப் பயன்படுத்தும் பயனர்களின் அடையாளத்தை உறுதி செய்து நம்பகத்தன்மையை அதிகரிக்கவும், ஆள்மாறாட்டத்தைத் தடுக்கவும், திருமணம் தொடர்பான மோசடிகளைக் கட்டுப்படுத்தவும் ஆதார் அங்கீகாரத்தைப் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பயனர்களின்சுயவிவர ங்களில் 'சரிபார்க்கப்பட்ட பயனர்' என்பதைக் குறிக்கும் வகையில் ஆம்/இல்லை வசதியை அந்த நிறுவனம் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த ஆதார் சரிபார்ப்பு முறை முழுவதும் தன்னார்வ அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். ஆதார் எண்ணைப் பயன்படுத்திச் சரிபார்ப்பை மேற்கொள்ளும் முன்பு, சம்பந்தப்பட்ட ஆதார் எண் வைத்திருப்பவரின் ஒப்புதலை மேட்ரிமோனி நிறுவனம் கட்டாயம் பெற வேண்டும். மேலும், ஆதார் சரிபார்ப்பை மறுக்கும் அல்லது செய்ய முடியாத பயனர்களுக்கு, மாற்று அடையாள ஆவணங்களை சமர்ப்பிக்கும் நடைமுறையை நிறுவனம் தெரிவிக்க வேண்டும். ஆதார் சரிபார்ப்பு செய்ய மறுப்பதால் எந்தவொரு பயனருக்கும் சேவையை நிறுவனம் மறுக்கக்கூடாது.

அதன்படி ஆதார் அட்டைக்கு மாற்றாக ஓட்டுநர் உரிமம், பாஸ்போர்ட், பான்அட்டை ஆகிய ஆவணங்களை வாடிக்கையாளர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்காக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் இந்தியத் தனித்துவ அடையாள ஆணையத்துடன் கலந்தாலோசித்து, மேட்ரிமோனி நிறுவனத்தில் ஆதார் சரிபார்ப்பை மேற்கொள்ள அனுமதிப்பது தொடர்பாக தமிழக சமூக நலத்துறைக்குக் கடிதம் அனுப்பியிருந்தது. அதன் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழக அரசின் அரசிதழில் வெளியிடப்பட்ட நாளில் இருந்து இந்த அறிவிப்பு நடைமுறைக்கு வருகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda

ROSARB - பெங்களூர் தெற்கு, 4வது தளம், விஜயா டவர், டிரினிட்டி சர்க்கிள்,பெங்களூர் - 560 001. தொலைபேசி எண்: 080-25011441, நீட்டிப்பு. - 128, மின்னஞ்சல்: sarbes@bankofbaroda.co.in

119th FOUNDATION YEAR LEADING WITH TRUST

**அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு "பின்னிணைப்பு-IV-A [விதி 6 (2) & 8 (6)-இன் விதியைக் காண்க]**

**நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002-இன் கீழ், பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 6 (2) மற்றும் 8 (6)-இன் ஏற்பாட்டுடன் சேர்த்து, அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.**

பொதுவான பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கடன் வாங்கியவர்(கள்), அடமானம் வைத்தவர்(கள்) மற்றும் உத்தரவாதம் அளித்தவர்(கள்) ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவருக்கு அடமானம்/பற்று வைக்கப்பட்ட, மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவரான **பாங்க் ஆஃப் பரோடாவின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் உடைமை எடுக்கப்பட்ட, கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு/கணக்குகளை வசூலிப்பதற்காக, **"உள்ளபடியே, இருக்கும் இடத்தில்", "உள்ளபடியே, என்ன இருக்கிறதோ அப்படியே", மற்றும் "இருப்பது எதுவாக இருந்தாலும்"** என்ற அடிப்படையில் விற்கப்படும். கடன் வாங்கியவர்(கள்)/உத்தரவாதம் அளித்தவர்(கள்)/பாதுகாக்கப்பட்ட சொத்து(கள்)/பாக்கித் தொகை/காப்பு விலை/மின்-ஏலத் தேதி மற்றும் நேரம், ஈஎம்டி மற்றும் ஏல அதிகரிப்புத் தொகை ஆகியவற்றின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| கடன் வாங்குபவர்(கள்) உத்தரவாதமளிப்பவர்(கள்)/ அடமானம் வைப்பவர்(கள்) பெயர் மற்றும் முகவரி | அசையாச் சொத்தின் சுருக்கமான விவரம் மற்றும் ஏதேனும் அறியப்பட்ட பளுக்கள் (உரிமையாளர்/ அடமானதாரர் பெயர்) | A. கிளையின் பெயர் B. கணக்கு எண் C. மொத்த நிலுவைத் தொகை | மின்-ஏலம் தொடங்கும் நேரம் முதல் முடியும் நேரம் வரையிலான தேதி மற்றும் நேரம் | அ) முன்பதிவு விலை, ஆ) முன்பணத் தொகை, இ) ஏல அதிகரிப்புத் தொகை | நிலைஉடைமை (கட்டமைப்பு/ பௌதிக) | சொத்து ஆய்வு தேதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| **(1) M/s. டிஜி டிரான்சிட் இன்டராக்டிவ் மீடியா சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட். அதன் இயக்குநர்கள் மூலம்: (1) திரு. G. R. மோகன்**, த/பெ. G. N. ரமேஷ், **(2) திருமதி. சுஜாதா ஏ எஸ்,** க/பெ. திரு. ருத்ர மூர்த்தி, **(3) திரு. லிவிங்ஸ்டன் .R , த/பெ. திரு. ரதிராராஜ், அலுவலக முகவரி: எண்**. 588/4, 1வது தளம், 15வது மெயின், 22வது கிராஸ், எச்எஸ்ஆர் லேஅவுட், 3வது செக்டர், பெங்களூரு-560094, கர்நாடகா. **திரு. G. R. மோகன்,** த/பெ. ஜி. என். ரமேஷ், (இயக்குநர் மற்றும் உத்தரவாதமளிப்பவர்) வ/எண். 03, கே. நஞ்சப்பா லேஅவுட், கோரமங்களா 8வது பிளாக், பெங்களூரு, கர்நாடகா-560095. **திருமதி சுஜாதா AS** W/o. திரு. ருத்ர மூர்த்தி, (இயக்குனர் மற்றும் உத்தரவாதம்), R/o. எண். 137, KGE லேஅவுட், 5வது பிரதான சாலை, RMV 2வது நிலை, MGECHBS தேவசந்திரா போஸ்ட், பெங்களூர்-560094. **திரு. லிவிங்ஸ்டன் .R S/o. திரு. ரதிராராஜ், (இயக்குனர்) R/o. P. எண். 1, F 1 குரு கேலக்ஸி, 21வது தெரு, நங்கநல்லூர், சென்னை-600061**, தமிழ்நாடு. **ஸ்ரீமதி. அபூர்வா R மூர்த்தி** D/o. திரு. ருத்ர மூர்த்தி, (உத்தரவாதம்), R/o. எண். 137, KGE லேஅவுட், 5வது பிரதான சாலை, RMV 2வது நிலை, MGECHBS, தேவசந்திரா போஸ்ட், பெங்களூர், கர்நாடகா-560094. | பெங்களூரு, பெங்களூரு வடக்கு தாலுகா, கசாபா ஹோப்ளி, தேவசந்திரா கிராமத்தில் அமைந்துள்ள, மனை எண் 137 கொண்ட சொத்தின் ஒரு பகுதி. 30 x 40 அடி பரப்பளவுடையது. இது 1. திருமதி. சுஜாதா ஏ எஸ், திரு. ருத்ர மூர்த்தியின் மனைவி, 2. திருமதி. அபூர்வா ஆர் மூர்த்தி, திரு. ருத்ர மூர்த்தியின் மகள் ஆகியோருக்குச் சொந்தமானது. இதன் **எல்லைகள்: கிழக்கில்** மனை எண் 138, **மேற்கில்** மனை எண் 136, **வடக்கில்** சாலை, **தெற்கில்** மனை எண் 133. **அறியப்பட்ட பளு: ஏதுமில்லை** | **A. ROSARB (அடிப்படை கிளை EVJ சரக்கி கிளை)** **B. 74150400000019** **C. ரூ. 2,27,85,328/-** 25.09.2026 அன்றுள்ள நிலவரப்படி, மற்றும் பணம் செலுத்தும் தேதி வரையிலான ஒப்பந்த விகிதத்திலான கூடுதல் வட்டி, செலவுகள், கட்டணங்கள் மற்றும் இதர செலவினங்களுடன் . | **30.10.2026 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை** | **அ) முன்பதிவு விலை: ரூ. 2,06,00,000/- ஆ) EMD: ரூ. 20,60,000/- இ) ஏல அதிகரிப்புத் தொகை: ரூ. 25,000/-** | **குறியீட்டு உடைமை** | **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடமிருந்து முன் அனுமதி பெற்று (26.09.2026-க்குப் பிறகு)** |

**விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, https://www.bankofbaroda.in/e-auction என்ற இணையதள இணைப்பு மற்றும் Baanknet.com என்ற ஆன்லைன் ஏலத் தளத்தைப் பார்க்கவும்.**

**சொத்து வரி, மின்சாரக் கட்டணம், இ-காதா உருவாக்கும் கட்டணம் மற்றும் பொருந்தக்கூடிய பிற கட்டணங்கள் தொடர்பான நிலுவைக் கட்டணங்களை அதிகபட்ச ஏலதாரரே ஏற்க வேண்டும்.**

**மேலும், ஏலம் கோர விரும்புவோர் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை 080-25011441 என்ற தொலைபேசி எண்ணிலும், 9137960132 என்ற அலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.**

**தேதி: 25.09.2026, இடம்: பெங்களூரு** **கையொப்பம்/-அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா**



IKF Home Finance

**IKF ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்**

**ஈக்வினாக்ஸ் பை ஃபீனிக்ஸ்-டவர் 3, 10வது தளம், டைமண்ட் ஹில்ஸ், லும்பினி அவென்யூ, ராய் துர்க், கச்சிபௌலி, ஹைதராபாத் தெலங்கானா - 500081**

**அசையாச் சொத்துக்கான உடைமை அறிவிப்பு [(பின்னிணைப்பு IV) விதி 8(1)]**

ஏனெனில்,கீழ்க்கையொப்பமிட்டுள்ள நான், நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய வட்டி அமலாக்கச் சட்டம், 2002 (2002-இன் 54)-இன் கீழ், **IKF ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்** (இனிமேல் "IKF" எனக் குறிப்பிடப்படும்)-இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக, மற்றும் பிணைய வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 3-உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 13(12)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2)-இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதியிட்ட ஒரு டெர்னாண்ட் அறிவிப்பை வழங்கியுள்ளேன். அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும் அதன் மீதான வட்டியையும், அந்த அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு, கடனாளிகளான (கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள்) உங்களைக் கேட்டு அந்த அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனாளிகள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனாளிகளுக்கும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், சட்டத்தின் பிரிவு 13-இன் துணைப் பிரிவு (4)-உடன், பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8-ஐயும் சேர்த்து எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை கீழ்க்கையொப்பமிட்டுள்ள நான் உடைமையாக்கிக் கொண்டேன். குறிப்பாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடனாளிகளும், பொதுமக்களும் அந்தச் சொத்துடன் எந்தவொரு பரிவர்த்தனையும் செய்ய வேண்டாம் என்று இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும், அந்தச் சொத்துடன் செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனையும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான **"IKF"** கட்டணத்தையும் அதன் மீதான வட்டியையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

| வ எண் | கடன் வாங்குபவர்(கள்) / உத்தரவாதமளிப்பவர்(கள்) பெயர் | சொத்து/பிணையச் சொத்தின் விவரம் | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை | கைப்பற்றப் பட்ட தேதி |
|---|---|---|---|---|
| 1 | **LAN:-LNVLR01023-2400074961. திரு./திருமதி. D. புருஷோத்தமன், 2. திரு./திருமதி. P. சுகுணா** **முகவரி:** எண்:257 4 A, 3வது தெரு, மேரட்டிப்பாளையம், குருவராஜபாளையம், வேலூர், தமிழ்நாடு, இந்தியா-632107 **மேலும் முகவரி:** ஒடுகேத்தூர் SRO, அணைக்கட்டு வட்டம், வேலூர், நத்தம் பழைய SF. எண்: 495, 495/5, 495/6A, புதிய S.F எண்: 495/68, அகரம் கிராமம் மற்றும் பஞ்சாயத்து - 632107 | வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், அகரம் கிராமத்தில் அமைந்துள்ள, கீழே கொடுக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் இருக்கும் 121 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம் மற்றும் கட்டிடம். இது வேலூர் மாவட்டத்தின் ஒடுகத்தூர் துணைப் பதிவு மாவட்டத்திற்குள், பழைய சர்வே எண் 495, புதிய சர்வே எண்கள் 495/5 மற்றும் 495/6A ஆகியவற்றிலும், துணைப் பிரிவான புதிய சர்வே எண் 495/68-இலும் அடங்கும். எல்லைகள்: கிழக்கு: சர்வே எண் 495/50-இல் உள்ள தெரு, மேற்கு: சர்வே எண் 486-இல் உள்ள உமாபதியின் காலி மனை, வடக்கு: சர்வே எண் 495/67-இல் உள்ள மனோகரனின் வீடு, தெற்கு: சர்வே எண் 495/69-இல் உள்ள நாகராஜனின் வீடு. பரப்பளவுகள்: வடக்குப் பக்கம் 11 மீட்டர், தெற்குப் பக்கம்: 11 மீட்டர், கிழக்குப் பக்கம்: 11 மீட்டர், மேற்குப் பக்கம்: 11 மீட்டர். | **18-06-2026 ரூ. 7,08,089.62/-(ஏழு இலட்சம் எட்டு ஆயிரம் எண்பத்தொன்பது மற்றும் அறுபத்திரண்டு பைசா)** | **22-09-2026** |
| 2 | **LAN:LNPOY01023-240009318 1. திரு/திருமதி. C. நாகராஜ் 2. திரு/திருமதி. N. மோகனா 3. திரு/திருமதி. P. பாபு** **முகவரி:** 4/24, எம்.ஜி.ஆர். நகர், பழனியூர், கொட்டூர், பொள்ளாச்சி, கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா-642114 | கோயம்புத்தூர் தெற்குப் பதிவு மாவட்டம், ஆனைமலை துணைப் பதிவாளர் அலுவலகம், ஆனைமலை தாலுகா, கொட்டூர் கிராமம், சர்வே எண் 18/1, மனை எண் 8 கிழக்குப் பக்கத்தில் 1038.75 சதுர அடி பரப்பளவும், மனை எண் 8 கிழக்குப் பக்கத்தில் 645 சதுர அடி பரப்பளவும் சக்தி நகர் என்ற பெயரில். **1038.75 சதுர அடி பரப்பளவிற்கான எல்லைகள்:** 20 அடி அகல கிழக்கு-மேற்கு சாலையின் வடக்கே, மனை எண் 9-இன் தெற்கே, மனை எண் 8-இல் உள்ள மீதமுள்ள பகுதியின் கிழக்கே, விவசாய நிலத்தின் மேற்கே, **அளவுகள்:** வடக்குப் பக்கம் கிழக்கு-மேற்கு - 16.9 அடி. தெற்குப் பக்கம் கிழக்கு-மேற்கு - 17.10 அடி, கிழக்குப் பக்கம் தெற்கு-வடக்கு - 60 அடி, மேற்குப் பக்கம் தெற்கு-வடக்கு - 60 அடி. **645 சதுர அடி பரப்பளவிற்கான எல்லைகள்:** தற்போதுள்ள 20 அடி அகல கிழக்கு-மேற்கு லேஅவுட் சாலையின் வடக்கே, கிருஷ்ணன் மற்றும் தங்கமணி சொத்தின் தெற்கே, குப்புசாமி சொத்தின் கிழக்கே, மனை எண் 8-இல் உள்ள மீதமுள்ள பகுதியின் மேற்கே. **அளவுகள்:** வடக்குப் பக்கம் கிழக்கு-மேற்கு - 10.5 அடி. தெற்குப் பக்கம் கிழக்கு-மேற்கு - 11 அடி, கிழக்குப் பக்கம் தெற்கு-வடக்கு - 60 அடி, மேற்குப் பக்கம் தெற்கு-வடக்கு - 60 அடி மற்றும் தற்போதுள்ள மற்ற அனைத்து உரிமைகள் மற்றும் பாதை உரிமைகள். | **18-06-2026 ரூ. 14,86,610.92/- (பதினான்கு இலட்சம் எண்பத்தாறாயிரத்து அறுநூற்றுப் பத்து மற்றும் தொண்ணூற்று இரண்டு பைசா)** | **23-09-2026** |
| 3 | **LAN: LXPOY01324-250011558 & LNPOY00121-220003589 திரு/திருமதி. ஜவஹர் சுருளிமணி திரு/திருமதி. கீதா கோபாலகிருஷ்ணன்** **முகவரி:** எண். 14, D. T. C. P எண்: 95/ 2015,N. S. கார்டன், பூசாரிபட்டி பொள்ளாச்சி, கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா-642205 **மேலும் இங்கு:** கதவு எண் 5/65A2, மலர்விழி நகர், சின்ன பாளையம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா-642003 | திருப்பூர் பதிவு மாவட்டம், கோமங்கலம் சப்-ரிஜிஸ்டர் அலுவலகம், பொள்ளாச்சி தாலுக்கா, பூசாரிபட்டி கிராமம், எஸ்.எஃப்.எண்.4/1, புஞ்சை.ஹெச்.1.30.0. ஏக்கர் 3.21கு தீர்வு. 2.60 இப்போது துணைப்பிரிவு S.F.எண். 4/1 B1, Punjai.hec.0.35.5 ku Punjai.acres.0.88 எல்லைகளுக்கு S.F.No.4/1 தெற்குப் பக்க கிழக்கு மேற்கு மற்றும் SEN தெற்கு வடக்கு L வடிவத்தில் (1,e), வடக்கு - S.F.No. 4/2 & S.F.No. 6 கிழக்கு மேற்கு சாலை மற்றும் வடக்குப் பக்கம், S.F.No. 4/182, சொத்து சித்திரைக்கு சொந்தமானது. தெற்கு - எஸ்.எஃப்.எண். 4/1A, தாயாரம்மாள் மீதமுள்ள பகுதி நிலம். எஸ்.எஃப். எண் 5-க்கு கிழக்கே, எஸ்.எஃப். எண் 2 மற்றும் எஸ்.எஃப். எண் 4/2-க்கு மேற்கே, மற்றும் எஸ்.எஃப். எண் 5-க்கான எல்லைகள் 3.92 ஏக்கர் பரப்பளவு. இப்போது உட்பிரிவு 5/24, அதில் 2.04 ஏக்கர் பரப்பளவு பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது. எஸ்.எஃப். எண் 5/20-க்கு வடக்கே, 5/20, 4/182 சொத்து சித்ராவுக்குச் சொந்தமானது. எஸ்.எஃப். எண் 5-க்கு தெற்கே, தெற்குப் பக்கம் தெற்கு வடக்கு I, எஸ்.எஃப். எண் 5/1. சொத்து தாயாரம்மேலுக்குச் சொந்தமானது மீதமுள்ள பகுதி நிலம், கிழக்கே -எஸ்.எஃப். எண் 28, எஸ்.எஃப். எண் 4/1-க்கு மேற்கே. மொத்தமாக 2.92 ஏக்கர் விவசாய நிலம், குடியிருப்பு மனைகளாக மாற்றப்பட்டு, என்.எஸ். கார்டன் என்ற பெயரில் ஒரு மனைப்பிரிவு உருவாக்கப்பட்டது. மேலும், சர்வே எண் 5/3A1-இல் உள்ள மனை எண் 14-இல், பின்வரும் எல்லைகளுடன், 1738 சதுர அடி அல்லது 161.46 சதுர மீட்டர் பரப்பளவில், நகர திட்டமிடல் ஆணையத்திடம் இருந்து DTCP எண் 95/2015-இன் கீழ் ஒப்புதல் பெறப்பட்டது. 1738 சதுர அடி பரப்பளவிற்கான எல்லைகள்: இடம் எண் 15-க்கு வடக்கே, தெற்கு-வடக்கு 23 அடி அகல கிழக்கு-மேற்கு லேஅவுட் சாலைக்கு தெற்கே, கிழக்கு-மேற்கு 23 அடி அகல தெற்கு-வடக்கு லேஅவுட் சாலைக்கு கிழக்கே, இடம் எண் 13-க்கு மேற்கே. **அளவீடுகள்:** வடக்குப்பக்கம் கிழக்கு மூலை மேற்கு நோக்கியது, கிழக்கு-மேற்கு 30 அடி மற்றும் பின்னர் மேற்கு, மூலை தெற்கு-மேற்கு குறுக்கு-7 அடி, தெற்குப்பக்கம் கிழக்கு-மேற்கு -45 அடி, கிழக்குப்பக்கம் தெற்கு-வடக்கு-50 அடி, மேற்குப்பக்கம் தெற்கு-வடக்கு-45 அடி மற்றும் பிற அனைத்து தற்போதைய உரிமைகள் மற்றும் பாதை உரிமைகள். | **18-06-2026 ரூ. 6,15,717.42/- (ஆறு இலட்சம் பதினைந்தாயிரத்து எழுநூற்றுப் பதினேழு மற்றும் நாற்பத்திரண்டு பைசா) ரூ. 10,81,062.42/- (ஒரு இலட்சம் எண்பத்தொரு ஆயிரத்து அறுபத்திரண்டு மற்றும் நாற்பத்திரண்டு பைசா)** | **23-09-2026** |

**இடம்: தமிழ்நாடு**
**தேதி: 22-09-2026, 23-09-2026**

**கையொப்பம்/-அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**IKF ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பாக**